# திறந்த கல்வி வளங்கள் 2019

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | திறந்த கல்வி வளங்கள் - 2019 |
| செயற்றிட்ட எண் | NF/PG/2019/0004 |
| செயற்றிட்ட இடம் | வட மாகாணம், இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2019 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குதாரர்கள் | நூலக நிறுவனம், பாடசாலைகள், சிறகுகள் அமையம் |

**நூலக நிறுவனம்**

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது

**அறிமுகமும் பின்புலமும்**

நூலக நிறுவனம் 2012 - 2013 காலப் பகுதியில் பள்ளிக்கூடம் எனும் முன்னோடிச் செயற்றிட்டத்தின் ஊடாகப் பாடசாலை மாணவர்களுக்கான கல்விவளங்களைச் சேகரித்து எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தினை முன்னெடுத்தது. அதன் தொடர்ச்சியாக 2019 ஆம் ஆண்டு “கல்விவளங்கள் ஆவணப்படுத்தல்” எனும் செயற்பாடுகளின் ஊடாக வடக்கு மாகாண பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக வெளியிடப்படுகின்ற கல்விசார் ஆவணங்களை சேகரித்து ஆவணப்படுத்தும் நோக்கத்தில் இச்செயற்றிட்டம் முதன்மை பெறுகின்றது.

திறந்த கல்வி வளங்கள் (Open Edcuational Resources) மாணவரால் திறந்த அணுக்கத்தில் கட்டணம் இன்றி பயன்படுத்தக் கூடிய கல்வி வளங்களைக் குறிப்பிடுகிறது. இணைய தளம் ஊடாகப் பெற்று பயன்படுத்தக் கூடிய எண்ணிம வளங்களை வழங்கிக் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவித்தலே இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இதனூடாக மாணவர்களின் செலவினை குறைத்தல், இலகுவாக வளங்களைக் கண்டடைய உதவுதல், கல்வியாளர்கள் மத்தியில் மூள் பயன்பாட்டை ஊக்குவித்தல், கல்வியியல் தொடர்பான ஆய்வுக்கு உதவி செய்தல் போன்ற பயன்பாடுகளும் சாத்தியமாகின்றன.

## இலக்குகளும் நோக்கங்களும்

பாடசாலைகளின் மற்றும் கல்விநிறுவனங்களின் ஆவணங்களை ஆவணப்படுத்தி அவற்றை திறந்த அணுக்கம் மூலம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைய தளம் மூலமாக பெறத்தக்க வகையில் அவற்றை சேகரித்து ஆவணப்படுத்தி திறந்த அணுக்கத்திற்கு அனைவரும் பயன்தரும் வகையில் சேமித்தலை இலக்காகக் கொண்டு கல்வி வளங்களை சார்ந்து பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் பயன்பெறும் வகையில் இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. 2019 ஆம் ஆண்டிற்கான திறந்த கல்வி வளங்கள் செயற்றிட்டத்தின் ஊடாக பாடசாலைகளிலே மேற்கொள்ளப்படும் கற்றல் கற்பித்தற் செயன்முறைகளுடன் தொடர்பான ஆவணங்களைச் சேகரித்து, ஆவணப்படுத்தி அவற்றை இணையத் தளம் வழியாக பாடசாலை சமூகம் மற்றும் அனைவருக்கும் பயன்தரும் வகையில் வெளியிடுதல் எமது சமூகங்களின் கல்வி சார் முயற்சிகளுக்கு உறுதுணையாக அமையும். அவ்வகையில் நூலக நிறுவனம் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் ஆவணப்படுத்தலின் ஓர் பகுதியாக பாடசாலைகளின் கல்வி வளங்கள் சார் ஆவணங்களைப் பெற்று அவற்றை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் நோக்கில் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலைக் கல்வியுடன் தொடர்பான வளங்கள் தற்சமயம் இணைய வடிவில் வெவ்வேறு தளங்களிலே சிதறிக் கிடக்கின்றன. அவற்றினை, அனுமதி பெற்று, நூலகச் சூத்ரங்களுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி விபரித்து ஒரு தளத்துக்குக் கொண்டு வந்து, வகுப்பு ரீதியாகவும், பாட ரீதியாகவும் பகுத்து மாணவர்களின் பாவனைக்காக விடுவது இந்தச் செயற்றிட்டத்தின் ஒரு நோக்கமாகும். அத்துடன் இதனுள் அடங்கும் ஆவணங்களாக கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்படும் பாடத்திட்டங்கள், ஆசிரியர் கையேடுகள், மாதிரி வினாத்தாள்கள் என்பவற்றுடன், பரீட்சைத் திணைக்களத்தினால் கடந்த காலங்களிலே நடாத்தப்பட்ட வினாத்தாள்கள் மற்றும் புள்ளித்திட்டங்களும் உள்ளடங்குகின்றன. அத்துடன் கடந்த காலங்களிலுள்ள பாடத்திட்டங்களும் அவற்றுடன் தொடர்பான கல்வி வளங்களும் கூட ஆவணப்படுத்தப்படும். இவ்வாறு செய்வதன் மூலம் கல்வி, பாடத்திட்டம், கல்வி வரலாறு, கற்றல் கற்பித்தல் முறைகள் போன்ற விடயங்கள் பற்றி ஆய்வு செய்வோருக்கும் பயனளிக்கக் கூடிய ஒரு செயற்றிட்டமாக இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## செயற்பாடுகள்

- பாடசாலையில் உள்ள வெளியீடுகளை கண்டறிதல் அவற்றின் பதிப்புரிமை அனுமதிகளுக்கு உட்பட்டு எண்ணிமப்படுத்தல். இருசாராரும் அவற்றின் பிரதிகளை பகிர்ந்து கொண்டமை.
- கல்விவளங்கள் சார் ஆவணங்களைப் பெறுவதற்கான அனுமதியை திணைக்கள அதிகாரிகள், அதிபர்,உரிய ஆசிரியர்கள் அல்லது வெளியீட்டு பொறுப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு நூலகம் நிறுவனத்தின் பணியாளர்களது உதவியுடன் ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டன.
- எண்ணிமப்படுத்தப்பட்ட கல்விவளங்கள் சார்ந்த ஆவணங்களை மீள ஒப்படைத்தல்.
- கல்விவளங்கள் சார் ஆவணங்களை அனைவரும் பயன்பெறும் வகையில் திறந்த அணுக்கத்திற்கு வழங்குதல்.

## அடைவுகள்

- மாணவர்கள் திறந்த அணுக்கம் மூலம் அணுகத்தக்க வகையில் வெவ்வேறு இடங்களிலிருந்து பெறப்பட்ட கல்விவளங்கள் சேகரிக்கப்பட்டமை
- 2015 வினாத்தாள்கள் உட்பட 2400 கல்விவளங்கள் ஆவணகம் வலைத்தளத்தின் கல்வி வளங்கள் பகுதியில் தொகுக்கப்பட்டன.
- 2012-13 காலப்பகுதியில் எண்ணிமப்படுத்தப்பட்ட பாடநூல்கள் போன்றனவும் கல்வி வளங்கள் பகுதியில் சேர்க்கப்பட்டன.

## எதிர்கொண்ட சவால்கள்

- கடந்தகால வினாத்தாள்கள் வியாபார நோக்கில் பயன்படுத்தப் படுகின்றமையினால் அவற்றைப் பெறுவதில் இருந்த சிரமங்கள்
- போதிய துறைசார் அனுபவம் உள்ள தன்னார்வலர்களை உள்வாங்குவதில் சிரமங்கள் காணப்பட்டது.
- ஆவணங்களை வகைப்படுத்துவதில் எதிர்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப, மூதரவுச் சிக்கல்கள்
- தனியார்கல்வி நிறுவனங்கள் வினாத்தாளை பெற்று ஆவணப்படுத்தில் ஏற்பட்ட சிரமங்கள்

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- பல்வேறு பிரதேசங்களிலிருந்து கல்வி வளங்களைச் சேகரிக்க விரிவான வலையமைப்பு அவசியமானது. சிறகுகள் அமையம் போன்ற கல்விசார் செயற்பாடுகளில் ஈடுபடும் தன்னார்வ அமைப்புக்களுடன் எதிர்காலத்திலும் இணைந்து செயற்படுவது அவசியமானது.
- நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே போதிய கல்வி வளங்களைத் திரட்ட முடியும். முழுமைப்படுத்த முடியும். அவ்வகையில் பாடசாலைகள் , கல்வி நிறுவனங்கள் மத்தியில் தொடர்ச்சியான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அவசியம்.
- பாடத்திட்டம் காலத்துக்கு காலம் மாறுபடுவதால் ஆண்டு தோறும் வினாத்தாள்களை எண்ணிமப்படுத்த வேண்டிய தேவை முக்கியத்துவத்தை உண்ர்ந்து ஆவணப்படுத்தல் ஊக்குவித்தல்.
- கல்விவளங்கள் தொடர்பான விடயங்களை உரிய வகையில் பயன்படுத்தல் தொடர்பான பரிந்துரைகளை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்குதல்.அது தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்
- கல்விவளங்கள் தொடர்பான விடயங்களில் காணப்படும் தேவைப்பாடுகள் , இடைவெளிகளை எதிவரும் காலங்களில் நிவர்த்தி செய்யும் வகையில் செயற்றிட்டத்தை திட்டமிட்டு வடிவமைத்தல். குறிப்பாகப் போதிய நிதி ஒதுக்கீடுகள் அவசியமானது.
- ஆவணகத்தின் கல்வி வளங்கள் பகுதி மேலும் இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் மேம்படுத்தப்பட வேண்டும்.